CC.No.77/2021
PW1 – வில்வலெட்சுமி
நாள் 15.06.2026, 12.05 P.M.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** வழக்கு சம்பவம் நடைபெற்ற 19.01.2021ம் தேதி மாலை 04.45 மணியளவில் கடலாடி அரசு மருததுவமனையில் வைத்தும், அதன் பிறகு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்தும் போலீசார் என்னை விசாரித்தனர். நான் வழக்கு சம்மந்தமாக காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். அந்த புகாரின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க முன்வந்துள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் சம்பவத்தன்று புகார் அளித்து விட்டேன். சம்பவத்தன்று காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க நான் சென்ற போது என்னுடன் எனது அண்ணன் மனைவி உமாபாண்டி, என்னுடைய மகள் விஜயகபிலா ஆகியோர்கள் வந்தார்கள்.

**2.** புகாரை நாங்கள் யாரும எழுதவில்லை. போலீசார் எழுதினார்கள். எனக்கு முழு சுயநினைவு இல்லாதால் நான் போலீசாரிடம் எத்தனை கையொப்பங்கள் செய்து கொடுத்தேன் என்று நினைவு இல்லை. சம்பவத்தன்று முன்னதாகவே 2 வருடங்களுக்கு முன்பு நானும், எனது கணவரான ஆஜர் எதிரியும் பிரிந்து விட்டோம். என்னை எனது கணவர் பிரிந்து சென்றபோதிலும், எனது வாழ்வாதாரம் கருதி எனக்கு 15 ஆடுகளை வாங்கி கொடுத்திருந்தார் என்றால் இல்லை. எனக்கும் எனது கணவருக்கும் ஆடு சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் ஒரே ஊரைச் சேர்ந்த உறவினர்கள் என்றால் திருமணத்திற்கு முன்னதாக நாங்கள் உறவினர்கள் இல்லை ஆனால் ஊர்க்காரர்கள்.

**3.** சம்பவம் நடந்ததாக சொல்லபடும் இடமானது எனது கணவருக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு முன்புறமாக ஆடுகளை கட்டி வைப்பேன் என்று சாட்சி சொல்லிவிட்டு பிறகு 3 குட்டிகள் என்று சொல்லிவிட்டார். நான் ஆடு மேய்க்கும் போது தவறி விழுந்து அதில் ஏற்பட்ட காயத்தை வைத்து கொண்டு எனது கணவரை பழிவாங்கும் நோக்கில் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை

என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

ஒம்/−திருமதி.தங்ககார்த்திகா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
கடலாடி